<u>சுருக்கம்</u>

பணியமைப்பு – நகராட்சி நிர்வாகம் – ஒசூர் நகராட்சி, தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டதை தொடர்ந்து 10 கூடுதல் பணியிடங்களை தோற்றுவித்து ஆணை பிறப்பிக்கப்படுகிறது

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நப.1) துறை

அரசாணை(நிலை) எண்.254

நாள்:15.12.2008.
கார்த்திகை 30, திருவள்ளுவர் ஆண்டு 2039.

படிக்கப்பட்டது:

3. அரசாணை(நிலை) எண்.85, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை; நாள் 22.05.1998.
4. நகராட்சி நிர்வாக ஆணையர் கடிதம் ந.க.எண்.15928/2006/எச்1, நாள் 12.01.2007, 05.10.2007 மற்றும் 08.05.2008.

-----

<u>ஆணை:–</u>

பார்வை ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஒசூர் நகராட்சி, தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்தி ஆணை பிறப்பிக்கப்பட்டது. இந்நகராட்சி தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட நிலையில், ஒரு தேர்வுநிலை நகராட்சிக்கு தேவையான பணியாளர்கள் இல்லாமல், பேரூராட்சியாக இருந்த காலத்தில் உள்ள பணியாளர்களே பணிபுரிந்து வருகிறார்கள். போதுமான பணியாளர்கள் இல்லாத காரணத்தால் நகராட்சி நிர்வாகத்தை சிறப்பாக செயல்படுத்த இயலாத நிலை உள்ளது. மேலும், தேவையான பணியிடங்கள் தோற்றுவிக்கப்படாததால், தேர்ந்தெடுக்கப்பட்ட நகர மன்ற தலைவர் மற்றும் உறுப்பினர்கள் தீர்மானிக்கும் செயல் திட்டங்களை உடனடியாக பொதுமக்களை விரைவாக சென்றடைய உரிய நடவடிக்கை மேற்கொள்ள இயலாத நிலையில், இந்நகராட்சி செயல்பட்டு வருகிறது. ஒசூர் நகரம் தொழிற்சாலைகள் சுற்றி அமைந்துள்ள நகரம். மிக விரைவாக வளர்ந்து வரும் நகரம். ஒசூர் நகராட்சி 1998–ல் தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்ட நிலையிலும் சிறப்புநிலை பேரூராட்சியாக இருந்த காலத்தில் உள்ள பணியிடங்கள் மட்டுமே இருந்து வருகிறது. ஒசூர் நகராட்சியின் துரித வளர்ச்சியினை கருத்தில் கொண்டும், நகராட்சியின் நிர்வாகத்தினை தங்கு தடையில்லாமல் செம்மையாக நடத்தவும், திட்டப் பணிகளை நிறைவேற்றவும் 26 கூடுதல் ணியிடங்களை அனுமதித்து

உத்தரவு வழங்குமாறு ஒசூர் நகராட்சி ஆணையர் கேட்டுக் கொண்டுள்ளார் என தெரிவித்து ஒசூர் நகராட்சி, தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு 10 ஆண்டு காலம் ஆவதாலும், போதிய பணியாளர்கள் இல்லாததால் நகராட்சிப் பணிகள் பாதிக்கப்படுவதாலும், ஒசூர் நகராட்சி ஆணையர் கோரிய 26 பணியிடங்களை சிறப்பினமாக தோற்றுவித்து, ஆணை வழங்குமாறு நகராட்சி நிர்வாக ஆணையர் அரசினை கேட்டுக் கொண்டுள்ளார்.

3. மேற்கூறியுள்ள சூழ்நிலையில், நகராட்சி நிர்வாக ஆணையாளரின் பரிந்துரையை ஏற்று, ஒசூர் தேர்வுநிலை நகராட்சியாக தரம் உயர்த்தப்பட்டு 10 ஆண்டு காலம் ஆவதாலும், போதிய பணியாளர்கள் இல்லாததால் நகராட்சிப் பணிகள் பாதிக்கப்படுவதாலும், இந்நேர்வினை சிறப்பினமாகக் கருதி, நகராட்சிகளின் நிலை உயர்த்துவது மற்றும் பணியிடங்கள் தோற்றுவிக்க வரையறை நிர்ணயிப்பது குறித்து அமைக்கப்பட்ட குழுவின் இறுதி அறிக்கையினை நிலுவையில் வைத்து, ஒசூர் தேர்வுநிலை நகராட்சிக்கு கீழ்காணும் பத்து பணியிடங்களை தோற்றுவித்து அரசு ஆணையிடுகிறது:-

| வரிசை எண். | பதவிகள் | எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கணக்கர் | 1 |
| 2. | இளநிலை உதவியாளர் | 3 |
| 3. | தட்டச்சர் | 1 |
| 4. | வருவாய் ஆய்வர் | 1 |
| 5. | வருவாய் உதவியாளர் | 4 |
| | மொத்தம் | 10 |

4. இவ்வாணை நிதித் துறையின் அ.சா. எண்.3278/FS/P/08, நாள் 10.11.2008 இசைவுப் பெற்று வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

நிரஞ்சன் மார்டி
அரசுச் செயலாளர்

பெறுநர்

நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை – 600 005.
ஆணையர், ஒசூர் நகராட்சி, ஒசூர்.
மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், சேலம்
மாநில கணக்காயர், சென்னை – 600 018.
உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநர், சென்னை – 600 108.
மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை – 600 009.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை – 600 009.

<u>நகல்:-</u>

நிதித் துறை, சென்னை – 9.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அநமு.2) துறை, சென்னை – 9.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

15/12/08
பிரிவு அலுவலர்.